1987 ஏப்ரல் 28]

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு சந்தன எண்ணெய் உற்பத்தி மீண்டும் துவங்க, ஏற்கெனவே அங்கே பணியாற்றிக் கொண்டிருந்த தொழிலாளர்களுக்கு தொடர்ந்து வேலை தர அரசு நடவடிக்கை எடுக்குமா? அங்கு 37 என்.எம்.ஆர். தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருந்தார்களே, அவர்களுக்கு வேலை தரப்படுமா? சந்தன எண்ணெய் உற்பத்தியில் நஷ்டம் ஏற்படாமல் இருப்பதற்காக அரசு தனியாக ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இந்தத் தொழிற்சாலையில் கைவசம் உள்ள சந்தன எண்ணெயின் மதிப்பு 1 கோடி ரூபாயாகும். ஆனால் உற்பத்தி விலையை விட இதற்கான மார்க்கெட் விலை குறைவு. ஆனால் சந்தன கட்டையின் விலையோ எண்ணெயின் விலையை விட அதிகம். இதற்குக் காரணம் இன்றைக்கு சுமார் 3, 4 கோடி ரூபாய் பெறுமானமுள்ள சந்தன எண்ணெய், சந்தன கட்டைகளைக் கடத்துவதின் மூலமாக வேறு மாநிலங்களில் தயாரிப்பதாகத் தெரிய வருகிறது. சந்தனக்கட்டைகளைக் குறிப்பிட்ட அளவுக்கு மேல் வைத்திருப்பது குற்றம் என்பதற்கான சட்டம் இல்லை. அதனால்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமிருந்து மத்திய அரசின் காட்டு இலாகாவுக்கு குறிப்பிட்ட அளவுக்கு மேல் சந்தன எண்ணெய் வைத்திருந்தால் அது குற்றம் என்றும், ஏற்றுமதி செய்தவர்கள் எங்கிருந்து ஏற்றுமதி செய்தார்கள் என்பதை எல்லாம் கண்டறிந்து அதுபற்றி சட்டமியற்ற வேண்டுமென்றும் கடிதம் எழுத இருக்கிறோம்.

(ஓ) சேலம் மாவட்டம், மோளப்பாறையில் கொத்தடிமை குடும்பங்களின் நலனுக்கென அமைக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு. கே. அன்பழகன் அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். அவர் சார்பாக அந்தப் பொருள் குறித்து திரு. ஜெ. ராஜாபாபு அவர்கள் மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவருவார்.

திரு. ஜெ. ராஜாபாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆந்திராவில் கொத்தடிமைகளாயிருந்து மீட்கப் பட்டவர்களுக்காக சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், கமலாபுரம் ஊராட்சி, மோளப்பறையில் அரசு மூலம் நிறுவப்பட்ட கிரஷர் சொசைடி செயல் இழந்து ஜல்லி உடைக்கும் தொழில் நிறுத்தப்பட்டுள்ளதால் அதில் பணிபுரியும் சுமார் 150 தொழிலாளர்கள் வேலை இழந்துள்ள நிலையில் அவர் தம் குடும்பங்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள் குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

வேறு மாநிலங்களிலிருந்து மீட்கப்பட்ட கொத்தடிமைக் குடும்பங்களின் நலனுக்கென, சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கோட்டமேட்டுப்பட்டி, கிராமம், மோளப்பாறை என்னும் இடத்தில் ஜல்லித் தொழிலாளர்கள் தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச்சங்கம் 15—12—1982-ல் பதிவு செய்யப்பட்டு, 31—12—1982 முதல் இயங்கி வருகிறது.

2. இச்சங்கத்திற்கு 1984-ல் ரூ. 50,000 நடைமுறை மூலதன மாக அரசு வழங்கியது. தவிர ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம் மற்றும் கூட்டுறவு வங்கிகள் மூலமாக ரூ. 2,78,800 இச்சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை இச்சங்கத் திற்கான கருவிகள் வாங்கவும், மின்வாரியம், வங்கிகள் முதலிய வற்றில் வைப்புத் தொகைகளாக வைக்க வழங்கப்பட்டுள்ளது.

3. இந்தச் சங்கம், 1986 ஆகஸ்ட் திங்கள் வரை இயங்கி வந்தது. அதன் பின்னர் கடந்த 6 திங்களாக இயங்கவில்லை. மேற்படி தொழிற்சங்கம் இயங்காததற்கு முதன்மைக் காரணம் நிதிப் பற்றாக்குறை என அறியப்படுகிறது. அதாவது கல் அரைக்கும் இயந்திரத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு கூலி கொடுக்கவும், ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கவும், இயந்திரம் ஓட்ட மின்கட்டணம் செலுத்தவும், இயந்திரத்தை

1987 ஏப்ரல் 28] [திரு. எ. அருணாசலம்]

அவ்வப்போது பழுது பார்க்கவும் போதிய நிதி வசதி இல்லாததால், இச்சங்கம் இயங்க இல்லாமல் போய்விட்டது. தவிர, சங்கத்தின் எழுத்தரும், இயந்திர ஓட்டுநரும் அவர்களுடைய பதவிகளை ராஜிநாமா செய்துவிட்டு நின்றுவிட்டனர். அவர்களுக்குப் பதிலாகப் புதிய எழுத்தர் மற்றும் ஓட்டுநர் ஆகியோரை நியமித்து, அவர்களுக்கு ஊதியம் வழங்கும் நிலையில் இச்சங்கம் இல்லாததால், புதிய எழுத்தர் மற்றும் ஓட்டுநர் நியமித்து சங்கத்தைச் செயல்படுத்த இயலவில்லை.

4. இச்சங்கம் ஆரம்பித்த காலத்தில் 39 கொத்தடிமைக் குடும்பங்கள் மட்டும் சங்கத்திற்கு அருகில் குடியமர்த்தப்பட்டனர். இவர்களில் 25 நபர்களுக்குத் தலா ரூ. 1,000 முன் பணமாக சங்கத்திலிருந்து கொடுக்கப்பட்டது. இவர்களுக்கு வேலை செய்த கூலி கொடுக்கும்பொழுது, ஓரளவு தொகையை கூலித் தொகையிலிருந்து பிடித்தம் செய்ய முற்பட்ட பொழுது, கூலித் தொகையில் பிடித்தம் செய்வது கடுமையாக ஆட்சேபிக்கப் பட்டது. வழங்கப்பட்ட முன்பணத்தை பிடித்தம் செய்யாமல் இருக்க இயலாது என நிர்வாகம் தெரிவிக்க, அவர்கள் முன் பணத்தைத் திருப்பிச் செலுத்துவதைத் தவிர்க்கும் பொருட்டு, எவ்வித தகவலுமின்றி மேற்படி 25 குடும்பங்கள் திடீரென்று வெளியேறிவிட்டனர். தற்போது 14 குடும்பங்களில் 5 குடும்பங்களைச் சேர்ந்த 5 பேர்கள் தமிழ்நாடு மேக்னிசைட் நிறுவனத்தில் பணியில் சேர்ந்து தற்போது பணிபுரிந்து வருகின்றனர். இடையில், சங்கம் இயங்கியபோது 8 கொத்தடிமைகளே பணி புரிந்து வந்தனர். ஜல்லிச் சங்கத்தில் கொடுக்கும் கூலித் தொகை அவர்களுக்குப் போதுமானதாக இல்லையென்றும் தமிழ்நாடு மேக்னிசைட் நிறுவனத்தில் அதிகக் கூலி கிடைப்பதால் மேற்படி நிறுவனத்தில் வேலை செய்வதையே விரும்புவதாகவும் தெரிவித்தனர். தற்பொழுது, சங்கத்திற்கு அருகில் வசிக்கும் 14 குடும்பத்தினர் (சுமார் 30 நபர்கள்) இச்சங்கத்திற்குச் சொந்தமான குன்றில் ஜல்லி உடைத்து, அதை விற்று வாழ்க்கை நடத்துகின்றனர். இச்சங்கத்தின் செயல்பாட்டினை நெறிமுறைப் படுத்துவதற்கென கூட்டுறவுத் துறை முதுநிலை ஆய்வாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.

5. இச்சங்கத்தின் உறுப்பினர்கள் யாவரும் மீட்கப்பட்ட கொத்தடிமைகள் ஆகும். இவர்கள் சங்கத்தில் நிலையாக தங்கி வேலை செய்வதில்லை. அடிக்கடி வெளியூர் சென்று திரும்புகின்றனர். இவர்கள் தொடர்ந்து சங்கத்தில் வேலை

[திரு. எ. அருணாசலம்] [1987 ஏப்ரல் 28

செய்யாததால் சங்கத்தின் உற்பத்தி பாதிக்கப்பட்டது. மேலும், கல் அரைக்கும் இயந்திரம் பழுதுபட்டு, அதைச் சரிபடுத்த கூடுதல் செலவினம் ஏற்பட்டது. ஆகவே, சங்கம் லாபத்தில் இயங்க இயலவில்லை. தற்பொழுது இயந்திரம் பழுதுபார்க்கப் பட்டு நல்ல நிலையில் இயங்கி வருகின்றது. உடைக்கப்பட்ட பெருங்கற்கள் யாவும் தற்பொழுது இயந்திரத்திற்கு அருகில் கொண்டுவந்து குவிக்கப்பட்டுள்ளது. பணி செய்யும் உறுப் பினர்கள் யாவரும் இனி தொடர்ந்து சங்கத்தில் பணிபுரிய அறிவுறுத்தப்பட்டுள்ளனர். எனவே, இனி உற்பத்தி பெருகி, சங்கம் லாபத்தில் இயங்கக்கூடிய வாய்ப்புகள் உள்ளன.

(4) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு மாநகராட்சி சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"1987-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சி சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சித் தேர்தலை இன்னும் ஓராண்டு நீட்டிப் பதற்கு வழிவகை செய்யும் அளவிலே இச்சட்டமுன்வடிவு இங்கே அறிமுகம் ஆவதால், அறிமுக நிலையிலேயே நான் எதிர்க்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை நான் அறிமுக நிலையிலேயே என் எதிர்க்கிறேன் என்பதற்கான ஒரு விளக்கத்தை இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விரிவாகப் பேசுவதை விவாதத்தின்போது வைத்துக்கொள்ளலாம். You record your objection, if any.